தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
மக்கள் தொடர்பு அலுவலர் &
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 12-3-2015

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## பூச்சி நோய் கண்காணிப்பு மற்றும் முன் அறிவிப்பு - மார்ச் 2015

**நெல்**

கோயமுத்தூர், ஈரோடு, சேலம், தஞ்சாவூர், திருநெல்வேலி, இராமநாதபுரம் மற்றும் விழுப்புரம் மாவட்டங்களில் நெற்பயிரில் இலைச்சுளருட்டுப் புழு மற்றும் தண்டுத்துளைப்பான் தாக்குதல் பரவலாக காணப்படுகின்றது. இவற்றை கட்டுப்படுத்த விளக்கு பொறிகளை அமைத்து அந்திப் பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணிக்கவும்.

பூச்சிகளின் பாதிப்பு அதிகமாக இருக்கும் நிலையில் வேப்பங்கொட்டை சாறு 5 சதவீதம் கரைசலை தயாரித்து பயிர்கள் மீது தெளிக்கலாம்.

பாக்டீரியா இலை கருகல் நோய் காஞ்சிபுரம், சேலம் மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் தென்படுகிறது. இவற்றை கட்டுப்படுத்த காப்பர் ஹைட்ராக்சைடு 2.5 கிராம் எடுத்து ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம்.

**உளுந்து**

தூத்துக்குடி, புதுக்கோட்டை மற்றும் திருவாரூர் மாவட்டத்தில் உளுந்து பயிரில் மஞ்சள் தேமல் நோய் காணப்படுகின்றது. உளுந்து பயிரில் தென்படும் மஞ்சள் தேமல் நோயை கட்டுப்படுத்த விவசாயிகள் டைமித்தோவேட் அல்லது மிதைல் டிமட்டான் மருந்தினை 2 மில்லி ஒரு லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.

**பருத்தி**

சேலம், தர்மபுரி, தேனி மற்றும் திருநெல்வேலி மாவட்டத்தில் பருத்தியில் சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டம் தென்படுகிறது. இவற்றின் நடமாட்டத்தை மஞ்சள் நிற ஒட்டும் பொறியை வைத்து கண்காணிக்கவும் - அதிக சேதம் காணப்படும் பயிர்களில் வேப்பங்கொட்டை சாறு 5 சதவீதம் தயாரித்து தெளிக்க வேண்டும்

**கரும்பு**

கோயமுத்தூர், ஈரோடு, கடலூர், திண்டிவனம், மற்றும் தேனி மாவட்டத்தில் கரும்பில் தண்டு துளைப்பான் தாக்குதல் பரவலாக காணப்படுகின்றது. இதை கட்டுப்படுத்த டிரைக்கோகிராம்மா முட்டை ஒட்டுண்ணிகளை 4வது மாதம் முதல் 15 நாட்கள் இடைவெளியில் ஏக்கருக்கு 1 சி.சி என்ற அளவில் 6 தடவை வெளியிட வேண்டும்.

ஈரோடு மாவட்டத்தில் கம்பளி அசுவுணித் தாக்குதல் பரவலாக காணப்படுகின்றது விவசாயிகள் பயிர்களில் உள்ள இயற்கை எதிரிகளை பாதுகாக்க இரசயான பூச்சிக்கொல்லிகளை உபயோகிக்க வேண்டாம் என்று அறிவுருத்தப்படுகிறது.

**நிலக்கடலை**

நிலக்கடலை பயிரில் இலைச் சுருட்டுப் புழுவின் தாக்குதல் கோயமுத்தூர், ஈரோடு, சேலம், தர்மபுரி மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் காணப்படுகிறது. விளக்கு பொறிகளை வைத்து அந்திப்பூச்சிகளின் நடமாட்டத்தை கண்காணிக்கலாம். தேவைப்படும் பட்சத்தில் வேப்பங்கொட்டை சாறு 5 சதவீதம் தயாரித்து தெளிக்க வேண்டும். கோடை மழை பெய்யாததினால் இலை சுருட்டுப்புழு தாக்குதல் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

துருநோய் மற்றும் இலைப்புள்ளி நோய்களின் தாக்குதல் மேற்கூறிய நிலக்கடலை பயிரிடும் பகுதிகளில் தென்படுகிறது. ஆதலால் இதனைக் கட்டுப்படுத்த ஹக்ஸகோனசால் 1 மிலி , லிட்டர் அல்லது மேன்கோசெய் 2 கி , லிட்டர் என்ற அளவில் தெளிக்கவும்.

**சாறு உறிஞ்சும் பூச்சிகள்**

குறிப்பாக வரும் மார்ச் மாதத்தில் வறண்ட வானிலையே காணப்படும் என்று எதிர்பார்க்கப் படுவதால் வெள்ளை ஈ, மாவுப்பூச்சி, தத்துப்பூச்சிகள் மற்றும் இலைப்பேன் ஆகிய சாறு உறிஞ்சும் பூச்சிகள் பரவலாக விவசாய பயிர்களில் அதிகமாக தென்பட வாய்ப்புள்ளது. ஆகையால் விவசாயிகள் தங்கள் வயல்களில் மஞ்சள் ஒட்டும் பொறிகளை (5,ஏக்கர்) வைத்து சாறு உறிஞ்சும் பூச்சிகளின் நடமாட்டத்தை கண்டறியவும். தேவைப்படின் வேப்பங்கொட்டை சாறு 5 சதவீதம் அல்லது வேப்ப எண்ணை 2 சதம் அல்லது டைமிதோயேட் 2 மில்லி 1 லிட்டர் தண்ணீருக்கு தயாரித்து பயிர்கள் மீது தெளிக்கலாம்.

**தகவல்**

இயக்குநர்,
பயிர் பாதுகாப்பு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் – 641 003.

மக்கள் தொடர்பு அலுவலர்